

## புனித வார திருநிகழ்வுகள்

**10.04.2022** **ஆண்டவர் இயேசுவின் பாடுகளின் குருத்து ஞாயிறு**

திருப்பலி காலை 6.30 மணி
(குருத்தோலை பவனி காலை 6.30 மணிக்கு
புனித பிலோமினாள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தொடங்கும்)
அன்று காலை 5.00 மணி, காலை 8.30 மணி திருப்பலிகள் நடைபெறாது.
மாலை 5.00 மணிக்கு கிறித்தவ ஒன்றிப்பு குருத்தோலைப் பவனி நடைபெறும். அதனை தொடர்ந்து பேராலய வளாகத்தில் **"புதிதாய் பிறப்போம் வா"** என்ற தலைப்பில் அகில உலக ஆயர் மாமன்ற சிந்தனைகளோடு கூடிய பாஸ்கா திருநிகழ்வு நடைபெறும்.
(தென்னைமரம் வைத்திருப்போர் குருத்தோலைகள் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்)

**12.04.2022** **திருத்தைலத் திருப்பலி** (செவ்வாய் மாலை)

நம் மறைமாவட்ட ஆயரோடு எல்லா அருள்பணியாளர்களும் இணைந்து திருப்பலி நிறைவேற்றுவார்கள்.

**13.04.2022** **ஒப்புரவு வழிபாடு** (புதன் மாலை)

**14.04.2022** **புனித வியாழன்**



காலை திருப்பலி நடைபெறாது. மாலை 6.00 மணிக்கு பேராலய வளாகத்தில் புனித வியாழன் சடங்குகளும் திருப்பலியும் நடைபெறும். தொடர்ந்து நள்ளிரவு வரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.

**15.04.2022** **புனித வெள்ளி**



காலை 5.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.
மாலை 6.00 மணிக்கு புனித வெள்ளி திருச்சடங்குகள் ஆரம்பமாகும்.
**இன்று உண்ணா நோன்பிருந்து அசைவம் தவிர்க்க வேண்டும்.**



**இரத்ததான முகாம் :**
**நேரம் : காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை**
**இடம் : பேராலயத்தின் கீழ்தளம்**
பொறுப்பு : பேராலய இளையோர் இயக்கத்தினர்

**16.04.2022** **புனித சனி**



இரவு 11.00 மணிக்கு இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா நள்ளிரவு வழிபாடுகள் தொடங்கும்.

**17.04.2022** **இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா**

திருப்பலி நேரங்கள் : காலை 6.30 மணி மற்றும் 8.30 மணி
மாலை 6.00 மணிக்கு **நற்கருணை ஆசீர்** நடைபெறும்.

**அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா நல்வாழ்த்துகள்**

St. Joseph's Institute of Printing, Trichy - 1. Ph.: 2411788





# புனித மரியன்னை பேராலயம்

**மேலப்புதூர், திருச்சி**

## தவக்காலச் சிறப்பு நிகழ்வுகள் – 2022

***அன்புக்குரியவர்களே,***



மார்ச் 2-ம் தேதி திருநீற்றுப் புதனோடு தவக்காலத்தில் அடியெடுத்து வைக்கிறோம். இது கடவுளின் அருள்பெருக்கின் காலம், அவரது இரக்கமிகு பேரன்பைக் கண்டுணர்ந்து, பேசமறந்து சிலையென நின்று, கண்ணீர்ப் பெருக்கில் வியந்து நிற்கும் காலம், அவரது பேரன்புக்கு முன் பணிந்து நின்று, அதை விருப்பத்தோடு தேடி, கண்டடைந்து மகிழ்ந்து நிற்கும் அற்புதமான காலம். செபங்களால், பல்வேறு பக்தி முயற்சிகளால், ஒறுத்தல் முயற்சிகளால், பிறரன்பு செயல்களால் இறைவனின் இரக்கத்தின் அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்லும் காலம். ஒப்புரவு அடையாளத்தின் மூலம் இறைவனின் இரக்கத்தின் மழையில் நனைந்து மகிழும் காலம். எனவே, இத்தவக்காலத்தில், அதிக நேரம் ஒதுக்கி செபிப்போம். அடிக்கடி திருப்பலியில் பங்கெடுப்போம். உண்ணா நோன்பிருந்து நம்மைப் பக்குவப்படுத்துவோம். ஏழைகளுக்கு உதவுவோம். நம் வாழ்வை நல்வழிப்படுத்துவோம். தவறான, பிழையான பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலைப் பெறுவோம். பங்கில் நடைபெறும் அனைத்து தவக்கால பக்தி முயற்சிகளிலும் பிறரன்புச் செயல்பாடுகளிலும் குடும்பமாய் கலந்து கொண்டு நம்மையே புதுப்பிப்போம்.

### ஓர் அன்பு வேண்டுகோள்!

**இத்தவக்காலத்தில் உண்ணா நோன்பு இருப்பதனால் நாம் தியாகம் செய்யும் அரிசியை தனியாய் எடுத்துவைத்து, அதை புனித வார வழிபாடுகளின் போது காணிக்கையாக கொடுத்து, பசி, பிணியால் அவதியுறும் ஏழை எளிய மக்களுக்கு பயன்படும்படி செய்வோம். இறைச்சி உண்ணாமல் இருந்து நாம் தியாகம் செய்வதில் கிடைக்கும் எளிய தொகையைக் கொண்டு எளியோருக்கு நம்மாலான உதவிகளைச் செய்வோம். சின்னஞ்சிறிய நம் சகோதர சகோதரிகளுக்கு நாம் செய்வதை தனக்கே செய்வதாக கருதுபவர் நம் கடவுள்.**

ஆசியுடன்,
**பேராலயப் பங்குப்பணியாளர்கள்**

**02.03.2022 திருநீற்றுப் புதன்**



திருப்பலி நேரங்கள் : காலை 5.00 மணி, காலை 6.30 மணி & மாலை 6.15 மணி

**இன்று சுத்தபோசனம், ஒருசந்தி அனுசரிக்க வேண்டும்.**

## பேராலயத்தில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும்

(வெள்ளிக் கிழமைகளில் : மாலை 6.00 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து திருச்சிலுவைப்பாதையும் நடைபெறும்)

**04.03.2022 தவக்கால முதல் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித மோட்சராக்கினி மாதா அன்பியம், புனித பர்னபா அன்பியம், புனித அமலோற்பவ மாதா அன்பியம், புனித செல்வநாயகி மாதா அன்பியம், திருஇருதய ஆண்டவர் அன்பியம், மரியின் ஊழியர் சபை அருள்சகோதரிகள், இளையோர் இயக்கம்

**11.03.2022 தவக்கால இரண்டாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித சந்தியாகப்பர் அன்பியம் (கெம்ஸ்டவுன்), புனித செபஸ்தியார் அன்பியம் (கெம்ஸ்டவுன்), புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம் (கெம்ஸ்டவுன்), புனித மரியம் தெரசா அன்பியம், புனித மலைமாதா அன்பியம், புனித அன்னாள் சபை அருள்சகோதரிகள், மறைக்கல்வி மாணாக்கர் மற்றும் ஆசிரியர்கள், பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை.

**18.03.2022 தவக்கால மூன்றாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித ஆசீர்வாதப்பர் அன்பியம், புனித அந்தோணியார் அன்பியம் (மார்சிங்பேட்டை), புனித வளன் அன்பியம், புனித லூர்தன்னை அன்பியம், புனித பவுல் அன்பியம், திருச்சிலுவை சபை அருள்சகோதரிகள், மரியாயின் சேனையினர்

**25.03.2022 தவக்கால நான்காம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித சவேரியார் அன்பியம் (செங்குளம்), புனித செபஸ்தியார் அன்பியம் (செங்குளம்), புனித அந்தோணியார் அன்பியம் (செங்குளம்), புனித ஜெஸ்டின் அன்பியம், புனித அடைக்கலமாதா அன்பியம் (கூனிபஜார்), புனித தாமஸ் அருள்சகோதரிகள், மாதா இருதய சபை அருள்சகோதரிகள், புனித வின்சென்ட் தே பவுல் சபையினர்.

**01.04.2022 தவக்கால ஐந்தாம் வெள்ளி**

**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** புனித ஆரோக்கிய அன்னை அன்பியம், புனித மத்தேயு கபிரியேல் அன்பியம், சகாயமாதா அன்பியம், புனித மரியன்னை அன்பியம், புனித அடைக்கலமாதா அன்பியம் (மரக்கடை), FMM அருள்சகோதரிகள், பலிபீட சிறார்கள்.

**08.04.2022 தவக்கால ஆறாம் வெள்ளி**


**சிலுவைப்பாதையை வழிநடத்துவோர் :** குழந்தை இயேசு அன்பியம், புனித அருளானந்தர் அன்பியம், புனித அன்னை தெரசா அன்பியம், புனித செசிலியா அன்பியம், புனித சிறுமலர் அன்பியம், மரியகம் அருள்சகோதரிகள், பெண்கள் பணிக்குழு.

## கிளைப்பங்கு ஆலயங்களில் திருச்சிலுவைப்பாதையும் திருப்பலியும்

**(செவ்வாய்க் கிழமைகளில் – நேரம் : மாலை 06.15 மணி)**

| | |
|---|---|
| 08.03.2022 | புனித மோட்ச ராக்கினி அன்னை ஆலயம், பூந்தோட்டம் |
| 15.03.2022 | புனித செல்வ நாயகி அன்னை ஆலயம், ஆலம் தெரு |
| 22.03.2022 | புனித அந்தோணியார் ஆலயம், புனித சவேரியார் ஆலயம், புனித செபஸ்தியார் ஆலயம், புனித அடைக்கல அன்னை ஆலயம், கூனிபஜார், புனித சவேரியார் ஆலயம், நேமத்தான் தெரு |
| 29.03.2022 | புனித சவேரியார் ஆலயம், புனித செபஸ்தியார் ஆலயம், புனித அடைக்கல அன்னை ஆலயம், கெம்ஸ்டவுன் |
| 05.04.2022 | புனித அந்தோணியார் ஆலயம், மார்சிங்பேட்டை |

## தவக்காலச் சிறப்பு நிகழ்வுகள்



13.03.2022 ஞாயிறு
**மறைக்கல்வி மாணாக்கருக்கான சிறப்பு தவக்காலத் தியானம்**
நேரம் : காலை 8.30 மணி முதல் 12.00 மணி வரை
(காலை, மதியம் உணவு வழங்கப்படும்)

18.03.2022 வெள்ளி
**முதியோர் மற்றும் நோயுற்றோருக்கான சிறப்புத் திருப்பலி**
(நோயில்பூசுதல் அருளடையாளம் வழங்கப்படும்)
நேரம் : காலை 10 மணி

19,20.03.2022
**தவக்காலத் தியானம்**
நேரம் : சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை
(மதிய உணவு வழங்கப்படும்)

26,27.03.2022
**தவக்காலத் திருப்பயணம்**

02.04.2022 சனி
**அருங்கொடை முழு இரவு செப வழிபாடு**
நேரம் : இரவு 10.00 மணி முதல் காலை 4.00 மணி வரை

**திருநீற்றுப்புதன் முதல் புனித வார புதன் வரை ஒவ்வொரு நாளும் காலைத் திருப்பலி மற்றும் மாலை திருப்பலிக்கு பின் பேராலயத்தில் சிறு சிலுவைப்பாதை நடைபெறும்.**



**ஒப்புரவு**

**தவக்காலத்தின் எல்லா நாட்களிலும் காலையும், மாலையும் திருப்பலிக்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும்.**